# திருவள்ளூர், வேளாண்மை இணை இயக்குநர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்

## முன்னிலை திரு.கோ.பாண்டியன், பி.எஸ்ஸி(விவ)

செ.மு.ஆ. எண். அஅ1/9744/2017 நாள். 12.04.2019

பொருள். பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருமதி.அ.துர்காதேவி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - நேரடி போட்டித் தேர்வு மூலம் 2015-16ம் ஆண்டிற்கான தட்டச்சர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது - தற்காலிக அடிப்படையில் பணியில் சேர்ந்தது - தட்டச்சர் பதவியினை பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் - குறித்து.

பார்வை. 1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.5643/PSD-A2/2017 நாள் 05.10.2017

2.சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி3/97065/2017 நாள். 20.10.2017

3.இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.அஅ1/9744/2017 நாள். 26.10.2017

4. திருமதி. அ. துர்காதேவி, தட்டச்சர் அவர்களின் பணிசேர் விண்ணப்ப நாள் 08.11.2017

5.சென்னை-5, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண்.MES3/159754/2017-1 நாள் 30.01.2018

-000-

பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினரால் 2015-2016ம் ஆண்டில் நேரடி போட்டித் தேர்வின் மூலம் தட்டச்சர் பதவிக்கு தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டு வேளாண்மைத்துறையில் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி. அ. துர்காதேவி அவர்களுக்கு பார்வை 2 மற்றும் 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் தட்டச்சர் பதவியில் ரூ.19500-62000 (புதிய ஊதிய விகிதம்) என்ற ஊதிய விகிதத்தில் இவ்வலுவலகத்திற்கு பணிநியமனம் ஆணை வழங்கி உத்தரவிடப்பட்டதனைத் தொடர்ந்து அன்னார் தட்டச்சர் ஆக இவ்வலுவலகத்தில் 08.11.2017 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

பார்வை (5)-ல் காணும் சென்னை -5 வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடிதத்தினைத் தொடர்ந்து திருமதி. அ. துர்காதேவி அவர்கள் தற்போது வகிக்கும் பதவியான தட்டச்சர் பதவியில் 08.11.2017 அன்று முற்பகல் முதல் பணியில் சேர்ந்து ஓராண்டு தொய்வில்லாமல் பூர்த்தியாக பணி முடித்துள்ளதைத் தொடர்ந்து இவரது தட்டச்சர் பதவியில் பதவி ஏற்ற நாளான 08.11.2017 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இப்பணிவரன்முறை, சென்னை உயர்நீதிமன்ற சென்னை/மதுரை கிளைகளில் இந்நியமனம் தொடர்பாக நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் வழங்கப்படும் இறுதித் தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் உத்தரவிடப்படுகிறது. ("This regularization is subject to the outcome of WP's pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group-IV 2015-2016 recruitment)

மேலும் இவரது பணியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் ஈராண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

மேலும் 2 ஆண்டு பணிக்காலத்திற்குள் தட்டச்சர்களுக்கான நிர்ணயிக்கப்பட்ட தேர்வில் அதாவது "Certificate Course in Computer on Office Automation" தேர்வில் 2 ஆண்டுகால தகுதிகாண் பருவத்திற்குள் தேர்ச்சி பெற்ற பின்னரே தட்டச்சர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவித்து ஆணையிடப்படும். அதன் பின்னரே தட்டச்சர் பதவியில் இரண்டாவது மற்றும் தொடர் காலமுறை ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-கோ.பாண்டியன்
வேளாண்மை இணை இயக்குநர்(பொ)
திருவள்ளூர்

பெறுநர்
திருமதி.A.துர்காதேவி
தட்டச்சர்
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்,
திருவள்ளூர்.
நகல். பணிப்பதிவேடு
நகல். இ.கோ.

/உத்தரவின்படி/

15/4/19
கண்காணிப்பாளர்

12/04/19